# பெரியார் பிறவாமல் இருந்தால்...!



022895

டாக்டர் கலைஞர்

# பெரியார் பிறவாமல் இருந்தால்...?

தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

டாக்டர் கலைஞர்

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்.

திராவிடர் கழக வெளியீடு
50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, சென்னை - 600 007.

பெரியார் பிறவாமல் இருந்தால்...?

டாக்டர் கலைஞர்

© பதிப்புரிமை பெற்றது

முதற்பதிப்பு - 1981

இரண்டாம் பதிப்பு - 1988

மூன்றாம் பதிப்பு - 1991

வெளியீடு: திராவிடர் கழகம், சென்னை.

பக்கம்: 2+18 = 20

நன்கொடை (குறைந்த அளவு) ரூ. 2.00

தமிழ் நூல் காப்பகம்
52262
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

அச்சிட்டோர்: 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,

50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007.

ANNA CENTENARY LIBRARY
04 OCT 2024
CHENNAI 85
G022895

# பெரியார் பிறவாமலிருந்தால்....?

ஆத்தூரில் அலைமோதுகின்ற இந்தப் பெரும் மக்கள் கடலின் நடுவே தமிழகத்தை விழிப்படையச் செய்த தன்மானப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவச் சிலையினைத் திறந்து வைக்கின்ற பேறு பெற்றமைக்காக நான் பெருமை கொள்கிறேன் - பேருவுவகை அடைகிறேன்.

இந்த சிலை திறப்பு விழா, நீண்ட நாள்களுக்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்டு, தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்க நேரிட்டு, இன்றைக்கு எழுச்சிக்கோலத்தோடு உணர்ச்சி மயமாக நிறை வேற்றப்பட்டிருக்கின்றது.

## இலட்சிய நோக்கம்

தந்தை பெரியார் அவர்களுடைய சிலையை நாம் திறந்து வைக்கி றோம் என்றால். ஒரு உருவச்சிலையை, நகரின் நடுவே அனைவரும் பார்க்கத் தகுந்த இடத்தில் அமைத்து, தந்தை பெரியாரை நினைவு படுத்துகிறோம் என்பது மாத்திரம் பொருளல்ல.

எந்தக் கொள்கைகளுக்காக - தன்னுடைய வாழ்நாள் எல்லாம் போராடினாரோ - எந்த லட்சியங்கள் வெற்றி பெறவேண்டுமென்பதற் காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டாரோ - எந்த இனம் விழிப் புற்று எழவேண்டும் என்பதற்காக எதிர்ப்புக் கணைகளையெல்லாம் மார்பிலே தாங்கி, தமிழகத்திலே வலம் வந்தாரோ - அந்த இலட்சியங் களும், கொள்கைகளும் நம்முடைய நினைவிலே என்றென்றும் தங்கி இருக்கும்.

தங்கி இருக்கக்கூடிய அந்த இலட்சியங்களையும், கொள்கைகளை யும் வெற்றி பெறச்செய்யவேண்டிய தொடர் பயணத்தை நாமெல்லாம் மேற்கொள்ளவும், சூளுரை எடுத்துக்கொள்கின்ற நாளாக இந்த சிலை திறப்பு விழா நாளை மாத்திரம் கருதாமல், பெரியார் அவர்களுடைய சிலையைப் பார்க்கிற நேரத்திலெல்லாம் அந்த எண்ணம் நம்மவர் உள்ளத்தில் எழவேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய சிலை

திறப்பு விழாக்கள் தமிழகத்திலே பட்டி தொட்டியெல்லாம் பட்டணக் கரைகளிலெல்லாம் பல்லாண்டுகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## பெரியார் சொன்னது

தந்தை பெரியார் வழியில் - பேரறிஞர் அண்ணா வழியில் தன்மானக் கொள்கைகளை தமிழனுடைய உள்ளத்திலே பதியவைத்து இனமானம் காக்கக் கடுமையாகப் போராடவேண்டும்; அதற்கான பயிற்சியைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் பெரியார் அவர்களுடைய சிலையை நாம் ஆத்தூரிலே மாத்திரமல்ல; தமிழ்த் தரணியிலே பல்வேறு பகுதிகளில் திறந்து வைத்துக்கொண்டிருக்கின்றோம்.

ஒருமுறை - எனக்கு நினைவிருக்கிறது; தந்தை பெரியார் அவர்களே கூட நேரிலே இருந்து, அவருடைய முன்னிலையிலே பெரியார் அவர்களது சிலை திறக்கப்பட்டபோது, அவர் சொன்னார்:

"என்னுடைய சிலைகளை (அதாவது பெரியார் அவர்களது சிலைகளை ) நிறைய திறக்கவேண்டும். ஏன் திறக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றால், இப்படிப்பட்ட கொள்கைகளுக்காக வாழ்ந்த ஒருவன் இருந்தான் - அவன் காலத்தால் பிரிக்கப்பட்டான் என்பதைக் கூற மாத்திரமல்ல; அவன் எதற்காக வாழ்ந்தான்? என்ன கொள்கைகளைச் சிந்தித்தான்? அதை எப்படிச் செயல்படுத்தினான் என்பதை நாடு புரிந்துகொண்டு இந்த நாடு காடாக ஆகாமல் இருக்க அந்தச் சிலைகள் பயன்படும். எனவே, என்னுடைய சிலைகளை இன்னும் ஏராளமாகத் திறங்கள்" என்று தந்தை பெரியார் அவர்கள், ஒரு சிலை திறப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

## பெரியார் இல்லாமலிருந்தால்-

தந்தை பெரியார் அவர்கள் இன்று சிலையாக இருக்கிறார்.

தயவு செய்து கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்.

பெரியார் என்கிற ஒருவர் தமிழகத்தில் தோன்றாமலிருந்தால் அவருடைய பணி தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைக்காமற் போயிருந்தால் - அவருடைய போராட்டங்கள் இந்தத் தமிழ் மண்ணிலே

நடைபெறாமலிருந்தால், இன்றைக்கு தமிழன் எவ்வளவு தலை தாழ்ந் திருப்பான்? எந்த அளவுக்கு தமிழன், பொட்டுப் பூச்சிகளாய் - புன் மைத்தேரைகளாய் மதிக்கப்படக்கூடிய நிலையிலே இருப்பான் என்ப தை தயவு செய்து எண்ணிப்பாருங்கள்.

இன்று அரசு அலுவலகங்களைப் பார்க்கிறோம். அங்கே தமிழர் கள் ஏராளமானோர் பணியாற்றுகின்ற காட்சியினைக் காண்கின் றோம்.

தாசில்தார்களைப் பார்க்கிறோம்; அவர்களில் பலர் தமிழர்க ளாக இருக்கிற காட்சியையும் பார்க்கிறோம்.

அதைப்போலவே மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பார்க்கி றோம். எல்லா இடங்களிலுமல்ல - ஒரு சில இடங்களில் தமிழர்கள் இருப்பதைப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட வேலைகளுக்கு அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை 'அவர்களை'த்தான் தேர்ந்தெடுப்பார்கள்.

## தந்தை பெரியார் பார்வையால்-

இவைகள் அனைத்தும், ஏதோ அவர்களுக்குக் கிடைத்த கிரகப் பலன்களால் அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட சனிப் பெயர்ச்சியின் விளைவால் அல்லது, குரு பெயர்ச்சியின் விளைவால் நாலாமிடத்தில் இருந்த சந்திரன் அய்ந்தாமிடத்திற்குச் சென்ற காரணத்தால் அல்லது சந்திரன் அவர்களுடைய திசையைப் பார்த்த காரணத்தால் தமிழர்க ளுக்கு ஏற்பட்டுவிட்ட ஆதாயங்கள் அல்ல சந்திரனும், சூரியனும், சுக் கிரனும் பார்த்த பார்வையால் இந்தப் 'பவிசு' தமிழனுக்கு ஏற்பட வில்லை.

தந்தை பெரியார் என்ற ஒருவர் பார்த்த பார்வையால்தான் தமிழ னுக்கு இந்த ஏற்றம் கிடைத்திருக்கிறது.

திராவிடர் இயக்கம் என்றும் - திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், இன்றைக்கு நம் சமுதாய இயக்கம் - அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முறையே பாடுபடுகிற இந்த இரண்டு இயக்கங்களுடைய அடிப்படை வரலாறு என்ன?

## சாஸ்திரக் கூற்று

ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்பு, 'நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு; பள்ளிக்குச் செல்ல அருகதை கிடையாது;' அப்படித்தான் சாஸ்திரத்தில் போட்டிருக்கிறது என்று மாடுமேய்க்க மாத்திரம் ஒரு சாதி என்றும், மாளிகையிலே குடியிருக்க இந்த சாதிக்குத்தான் மகேஸ்வரன் அங்கீகாரம் அளித்திருக்கிறான் என்றும், பிரிக்கப் பட்டிருக்கிற கொடுமையைக் கண்டு அலறித் துடித்தார்கள்.

அவர்களால் பெரியாரைப் போல், அண்ணாவைப் போல் போராட முடியவில்லை. ஆனாலும், அவர்கள் கருத்துகளை மக்கள் மனதில் பதியவைத்தார்கள்.

அன்றைக்கிருந்த ஆட்சியாளரிடம் முறையீடு செய்தார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள்; இவைகளையெல்லாம் ஒரு நிலைப்படுத்தித்தான் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

அப்படி உருவாக்கப்பட்ட அந்த அமைப்பின் கால கட்டம் ஏறத்தாழ இன்றிலிருந்து எழுபது ஆண்டுகளுக்கு முந்தியது.

அதை ஒரு உவமையால் சொல்லவேண்டுமென்றால் மழை வருவதற்கு முன்பு நீலவானத்தில் வெண் மேகங்கள் திரண்டு பிறகு அவைகளெல்லாம் கருமேகங்களாக உருக்கொண்டது போன்ற காட்சி!

அதற்குப் பிறகுதான் இடி, மின்னல்!

அந்த இடிகளாகவும், மின்னல் தாக்குதல்களாகவும்தான் பெரியாரும் - அண்ணாவும் அந்த இயக்கத்திலே நுழைந்தார்கள்.

## இடி - மின்னல்

அதற்குப் பிறகு மழை பொழிந்து, இன்றைக்கு இங்கு மழை பொழியுமோ பொழியாதோ - எனக்குத் தெரியாது - ஆனால், எழுபது ஆண்டுகளுக்கு முன்பு கொஞ்சம் கொஞ்சமாக குவிந்திருந்த மேகங்கள் எல்லாம் திரண்டு எதிர்ப்புகளைக் கலக்கிடும் இடியாகவும், இழிவுகளைத் தீய்த்திடும் மின்னலாகவும், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணா அவர்களும் பொழிந்தார்கள்!

அவர்கள் பொழிந்த அந்த மழையினால்தான் சாதிக்குட்டிச் சுவர்கள் எல்லாம் கரைந்தன. மூடநம்பிக்கை என்கிற தேவையற்ற, புல் பூண்டுகள் எல்லாம் அழிந்தன.

அந்த மழையிலேதான் தமிழனின் கழனி நீர்நிரம்பியதாக - நெல் நிரம்பியதாக உயர்ந்தது!

சுயமரியாதைப் பயிர் - அதுதான் ஆயிரங்காலத்துப் பயிர் - அந்த ஆயிரங்காலத்துப் பயிர்தான் இன்றைக்கு திராவிடர் கழகமாக திராவிட முன்னேற்றக் கழகமாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

## நாணயத்தின் பக்கங்கள்

திராவிடர் கழகம் - தி.மு.கழகம் இவைகளை நான் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றுகூடச் சொல்லமாட்டேன். அது தவறு என்று நான் கருதுவதால் அல்ல.

எப்படி ஒரு ரூபாய் நாணயத்திற்கு இரண்டு பக்கம் தேவையோ அப்படித்தான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ரூபாய் நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று நான் ஆத்தூரிலே பெரியார் சிலைத் திறப்பு விழாவிலே பிரகடனப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிடர் கழகத்தினுடைய உணர்வு இல்லாமல் தி.மு.கழகம் இல்லை.

நான் அவர்களுக்குச் சொல்லமாட்டேன். தி.மு.கழகத்தின் உணர்வில்லாமல் திராவிடர் கழகம் இல்லையென்று நான் சொல்லத் தயாராக இல்லை.

## கரன்சி நோட்டு

கரன்சி நோட்டுக்கு இரண்டு பக்கம் தேவை. ஒரு பக்கத்தை மட்டும் அழகாக சுவரிலே ஒட்டி வைத்துவிட்டு இந்த நோட்டுச் செல்லும் என்ற சொன்னால் அது செல்லாது. ஏனென்றால் பின்புறம் ஒட்டப் பட்டுவிட்ட காரணத்தால் அது பயன்படாது.

அது பயன்படாமல் போய்விட்ட காரணத்தால் என்னதான் அழகாக கண்ணாடிச் சட்டம் போட்டு வைத்தாலும் அந்த நோட்டுச் செல்லுபடியாகாது.

அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகம் என்கின்ற இரண்டு புறத்தைக் கொண்ட இந்தக் கரன்சி நோட்டைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கிற வரையிலேதான் செல்லும்.

அதிலே திராவிடர் கழகம் என்ற பகுதியைச் சுவரிலே ஒட்டி விட்டு - 'பார்! பார்! தி.மு.கழகம் எவ்வளவு அழகாகத் தெரிகிறது' என்று சொன்னால் திராவிடர் கழகம் என்கிற பின்பக்கம் இல்லாமல் தி.மு. கழகம் செல்லாது.

அதை உணர்ந்திருக்கிறவர்கள்தான் இன்றைக்கு தி.மு.கழகத்திலே இருக்கிறோம்.

ஆத்தூரில் கருணாநிதி இப்படிப் பேசி விட்ட காரணத்தால், இதனுடைய விளைவு என்ன ஆகுமோ என்று யாராவது அஞ்சுவார்களேயானால் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

## வானொலி விஷமம்

வீரமணி சொன்னதைப் போல - தந்தை பெரியார் அவர்கள் மறைந்த நேரத்தில் - வேலூர் மருத்துவமனையில் தந்தை பெரியார் மறைந்தார் என்ற செய்தி எங்கள் காதுகளில் பட்டவுடன், நாங்கள் வானொலியைத் திறக்கிறோம்.

வானொலியில் இன்ப கீதம் பாடப்படுகிறது! காரணம், தந்தை பெரியாருடைய சவ அடக்கம் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவிக்காத காரணத்தால் வானொலியில் இன்ப இசை எழுப்புகிறார்கள்!

அறிவித்தாலும், அறிவிக்காவிட்டாலும் தந்தை பெரியார் எவ்வளவு பெரிய வீரர்! எத்தகைய புரட்சிக்காரர்! எவ்வளவு பெரிய மறுமலர்ச்சியைத் தமிழகத்திலே உருவாக்கியவர் என்பதை எண்ணிப் பார்த்து வானொலியினர் சோக கீதம் எழுப்பி இருக்கவேண்டும்.

## அரசு மரியாதை

என்னுடைய இல்லத்திற்கு பெரிய அதிகாரிகள் எல்லாம் வருகிறார்கள்; அப்போது நான் ஆட்சிப் பொறுப்பில் தலைவராக இருக்கிறேன்.

வந்த அதிகாரிகளிடத்தில் பெரியாரின் சவ அடக்கத்தை அர சாங்க மரியாதையோடு நடத்தவேண்டும் என்று சொல்கிறேன்.

ஒரு பெரிய அதிகாரி என்னிடம் கேட்கிறார்:

"பெரியார் சட்டசபையில் ஒரு உறுப்பினராகக்கூட இருந்ததில் லையே; அவருக்கு எப்படி அரசாங்க மரியாதை செய்யலாம்?" என்று கேட்கிறார்!

நான் கேட்கிறேன் அவரைத் திருப்பி - மகாத்மா காந்தியடிகள் எந்தச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தார்? அவர் மறைந்தபோது அவருக்கு அரசாங்க மரியாதைகள் தரப்படவில்லையா? என்று கேட் கிறேன்.

அரசாங்க அதிகாரி - அவரும் தமிழர்தான் - தலையைச் சொரிந்து கொண்டு, என்னிடம் 'இல்லை; இல்லை ஒரு மாநில அரசு அப்படிப் பட்ட ஒரு முடிவை எடுத்து அரசு மரியாதைகள் பெரியாருக்குச் செய் தால் மத்திய அரசின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்' என்று சொன் னார்.

நான் கேட்கிறேன் - "நேரிட்டால்?"

அவர் சொல்கிறார் - 'ஆட்சியைக்கூட கவிழ்க்கலாம்".

## அதுவே பெருமை

அப்போது நான் சொன்னேன், "எங்களுடைய ஆட்சியைக் கலைப்பதற்கு இதுதான் காரணமாகச் சொல்லப்படுமானால், இதை விடப் பெருமை எனக்கு வேறு எதுவுமே கிடையாது. எனவே, துணிந்து அறிவியுங்கள் பெரியாரின் சவ அடக்கம் அரசு மரியாதை யோடு நடைபெறும்" என்று குறிப்பிட்டேன். எனவேதான் சொல்கி றேன் - அன்றைக்கு ஏற்படாத அச்சம் - ஆட்சி கையிலே இருக்கும் போது ஏற்படாத அச்சம் - அகப்பையிலே உளுந்து இருக்கும்போது அதை ஆட்டலாம் - கீழே விழாமல் வீசலாம் என்று எண்ணிய கருணா நிதியா அகப்பையிலே உளுந்து இல்லாத நேரத்தில் அதை ஆட்டப் பயப்படுவான்? எனவே, இதற்கு அச்சப்படத் தேவையில்லை.

திராவிடர் கழகத்தின் உணர்வுகள்தான் தி.மு.கழகத்தை இயக்கு கின்ற உணர்வுகள்.

ANNA CENTENARY LIBRARY CHENNAI - 85
04 OCT 2024
G022895

## உணர்வால் ஒன்றே

திராவிடர் கழகத்தின் நடவடிக்கைகள் - செயல்முறைகள் இவை களிலே எங்களுக்கும் அவர்களுக்கும் வழிகள் வேறுவேறாக இருக்க லாம்.

ஆனால், உணர்வுகள் ஒன்றேதான்! அந்த உணர்வுகளைத்தான் நாம் பரிமாறிக் கொள்கிறோம்.

பெரியாருடைய சிலை திறப்பு விழா நேரத்தில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்கு நான் வைக்க விரும்புகிறேன்.

கருணாநிதியும் வீரமணியும் ஏதோ திடீரென்று காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் அவர்களை எதிர்க்கி றார்கள்; அவரைப் பற்றி தரக்குறைவாக பேசுகிறார்கள் என்றெல்லாம் சிலர் எழுதுகிறார்கள்.

எங்களோடு விட்டால்கூட பரவாயில்லை; பாவம் என்னுடைய பழைய நண்பர் - நடமாடும் பல்கலைக் கழகம் - நாவலர் அவர்கள் அ.தி.மு.க.விலே பொதுச் செயலாளராகவும் இருந்து அதற்குப் பிறகு நிதி அமைச்சராகவும் இருப்பவர்.

அவர் ஒரு கூட்டத்திலே பேசும்பொழுது ‘அம்பேத்கரை எவனா வது நினைக்கிறானா? அம்பேத்கர் படத்தை எவனாவது வீட்டிலே மாட்டுகிறானா? ஆனால் சங்கராச்சாரியாருடைய படத்தை வீடு வீடாக மாட்டுகின்ற மட்டிகள் நிறைந்த நாடு இது’ என்று அவர் பேசி, அதைத் தாக்கிப் பேசுகிறவர்களும், எங்களையும் நாங்கள் சங்கராச் சாரியாரைத் தரக்குறைவாகப் பேசுகிறோம் என்று குறிப்பிடுகிறார் கள்.

விமர்சிப்பது வேறு; தரக்குறைவாகப் பேசுவது என்பது வேறு;

விமர்சிக்கின்ற உரிமை எல்லோருக்கும் உண்டு - எனக்கு சங்க ராச்சாரியாரிடம் மதிப்போ, மரியாதையோ என்றைக்கும் குறைந்தது கிடையாது. என்னைப்போலத்தான் வீரமணிக்கும்.

அவருடைய கொள்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று யாரும் எங்களை பிடிவாதப் படுத்தி வலியுறுத்த உரிமை படைத்தவர்கள் அல்ல.

## பெரியார் - அண்ணா வழிவந்த நாங்கள்

எங்கள் கொள்கைகளை இன்னொருவர் உள்ளத்தில் திணிக்க நாங்கள் விரும்பவில்லை - அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடையவேண்டாம்; எவர் சொன்ன சொல்லானாலும் அதை உந்தன் பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய் - என்பதுதான் தந்தை பெரியாருடைய அறிவுரை!

எந்தவொரு கூட்டத்திலும் பெரியாருடைய துவக்க உரையிலும் சரி, முடிவுரையிலும் சரி, இப்படித்தான் சொல்வார்:

"நான் சொன்னேன் என்பதற்காக நம்பாதே! வீட்டிற்குப் போய்

சிந்தித்து முடிவுக்கு வா" என்று.

அதைப்போலத்தான் சங்கராச்சாரியாரின் கொள்கைகளுக்கும் அண்ணாவின் இலட்சியங்களுக்கும் பெரியாருடைய இலட்சியங்க ளுக்கும் வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால், பெரியார், அண்ணா வழிவந்த நாங்கள் அந்த வேறு பாட்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவர்களே தவிர, சங்கராச் சாரியாரையோ - மற்றவர்களையோ மதிப்புக்குறைவாக - மரியாதைக் குறைவாக தரக்குறைவாகக் கருதக்கூடிய தரக்குறைவாக - தகுதிக் குறைவாகப் பேசவேண்டும் என்றோ எழுதவேண்டும் என்றோ முனை பவர்கள் அல்ல; எண்ணுபவர்களும் அல்ல.

எனக்கு சங்கராச்சாரியாரிடம் நிரம்ப மரியாதை உண்டு.

இன்னும் சொல்லப்போனால் ஒரு இரண்டு மூன்று மாதத்திற்கு முன்பு கொஞ்சம் நம்பிக்கை கூட ஏற்பட்டது.

'இவனும் எங்கேயோ போய் வலையில் வீழ்ந்து விட்டானே' என்று வீரமணி நினைப்பது எனக்குத் தெரியாமல் இல்லை.

என்ன நம்பிக்கை என்றால் என்னுடைய நண்பர் கண்ணதாசன் அண்மையில் மறைந்துவிட்டார். அருகாமையிலுள்ள சேலம் மாடர்ன் தியேட்டர்சில்தான் நாங்கள் இளமையிலேயே இணைபிரியாத நண்பர்களாக பழகத் தொடங்கினோம்.

கண்ணதாசன் அண்மையிலே அமெரிக்கா சென்றிருந்தார். இடை யிலே அவருக்கும் எனக்கும் எவ்வளவோ கருத்து வேறுபாடுகள்.

ஆனால், நட்பு முறியவில்லை. நட்பு அப்படியே இருந்தது. அவர் பெரியாரையேகூட தூஷித்தவர் - ஏளனம் செய்தவர்.

இன்னும் சொல்லப்போனால் அவர் அரசவைக் கவிஞர். ஆனால், அரசு நடத்திய பெரியார் விழாவிலே கலந்துகொள்ளவே முடியாது என்று கூறிவிட்டார்.

அவர் அவருடைய கொள்கையிலே பிடிவாதமாக இருந்தார்.

ஆனால், பெரியார் விழா நடத்திய அரசு தன்னுடைய கொள்கையிலே பிடிவாதமாக இருந்ததா? எனக்குத் தெரியாது.

அதை உங்களுடைய முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

அந்த - நண்பர் கண்ணதாசன் அமெரிக்காவுக்குச் சென்றார்; திடுமென நோய் அவரைப் பற்றிக்கொண்டது. அங்கே அபாயகரமான நிலையில் மருத்துவமனையிலிருப்பதாக செய்திகள் வந்தன. டாக்டர்கள் எல்லாம் அவர் பிழைப்பது அரிது என்று கருத்துத் தெரிவித்து விட்டார்கள்.

நான் கலங்கிப்போனேன்; சட்டசபையிலேகூட கேட்டேன். அவருடைய செலவுகளையெல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டேன்.

அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சட்டசபையிலேயே பதில் சொல்லப்பட்டது.

அந்த நேரத்தில் நானே நம்பினேன்.

எதையும் சுலபத்தில் நம்பாத நானே -'எதையும் சுலபத்தில் நம்பாதே' என்று தந்தை பெரியாரால் பயிற்றுவிக்கப்பட்ட நானே - அண்ணாவால் பயிற்றுவிக்கப்பட்ட நானே - ஒன்றை நம்பினேன்.

காரணம், அப்படி நடந்துவிட்டால் அது நமக்கு இன்பமான செய்தியாயிற்றே! என்பதற்காக நம்பினேன்.

நம்புவதால் என்ன கெட்டுவிடப்போகிறது என்று நம்பினேன்.

## திருநீறு பலித்ததா?

என்ன செய்தியென்றால், 'டாக்டர்கள் கைவிட்டாலும் பயப்படத் தேவையில்லை; காஞ்சிபுரத்திலிருந்து சங்கராச்சாரியார் திருநீறு அனுப்பி இருக்கிறார். அது கண்ணதாசன் நெற்றியிலே பூசப்பட்டு

விட்டது. சங்கராச்சாரியார் சொல்லி இருக்கிறார். கண்ணதாசன் உயிரோடு திரும்பி வருவார்: திரும்பி வந்து மேலும் இந்துமதத்தைப் பற்றித் தொடர்ந்து எழுதுவார் என்று, சங்கராச்சாரியாரே ஆசீர்வாதம் செய்திருக்கிறார்' என்ற செய்தி வந்தது.

அந்தச் செய்தி வந்ததும் எனக்கு ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சிக்கு ஈடாக, அவருடைய குடும்பத்தாருக்குக்கூட மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது என்று நம்பினேன். சங்கராச்சாரியாரே சொல்லிவிட்டார் அதுவும் காஞ்சிபுரத்திலிருந்து - அவர் கையாலேயே விபூதி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதால் நம்பினேன்.

ஆனால், கண்ணதாசன் முடிவு நம்மையெல்லாம் கண்கலங்க வைத்த முடிவு.

பிறகுதான் எனக்கே நம்பிக்கை குலைந்தது.

சங்கராச்சாரியார் விபூதியைக் கொண்டுபோய் உண்மையில் பூசினார்களா? என்று கேட்டேன். பூசியவர்கள் 'அய்யோ பூசினோமே' என்று சொன்னார்கள். பிறகு சங்கராச்சாரியார் உண்மையில் அப்படிச் சொன்னாரா? அவர் சொன்னது உண்மையா? இல்லையா? கண்ணதாசன் திரும்ப வந்து மீண்டும் 'அர்த்தமுள்ள இந்துமதத்தை'ப் பற்றி திரும்பவும் எழுதுவார் என்று சங்கராச்சாரியார் சொன்னாரா - இல்லையா? என்று கேட்டேன்.

அய்யோ! சொன்னாரே' என்று குறிப்பிட்டார்கள்.

நான் உங்களைக் கேட்கிறேன்.

இதற்குப் பிறகும் என்னைச் சங்கராச்சாரியாரை நம்பச் சொல்கிறீர்களா?

நீங்கள் நம்பக்கூடாது என்பதற்காக நான் ஏதோ ஒன்றை வலியச் சொல்வதாக எண்ணக்கூடாது.

சிந்தித்துப் பாருங்கள்; நான் சொல்கிறேன் என்பதற்காக நம்ப வேண்டாம். நீங்களே வீட்டிற்குச் சென்று இரவு படுக்கிற நேரத்தில் - அல்லது எழும்போது உங்களுடைய தாயோ தந்தையோ உங்கள் நெற்றியில் திருநீறு பூசுகிற நேரத்தில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட சங்கராச்சாரியாரின் விபூதியைப்பற்றி எண்ணிப்பாருங்கள். அதனுடைய 'பலனை'யும், அதனால் ஏற்பட்ட 'வெற்றி'யையும் எண்ணிப் பாருங்கள்.

ஆகவே, மனித சமுதாயத்தில் மூட - மவுடீக கொள்கைகளுக்கு இடம் தருதல் கூடாது; மனிதன் பகுத்தறிவோடு வாழவேண்டும் என்ற இந்தக் காரியங்களுக்காகத்தான் பெரியார் வாழ்நாளெல்லாம் பாடு பட்டார்.

நான் உங்களுக்கு பெரியாரின் சிலையைத் திறந்து வைக்கும் இந்த நேரத்தில் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எத்தனை இடையூறுகளையெல்லாம் கடந்து இவ்வளவு பெரிய வெற்றியை திராவிடர் இயக்கம் பெற்றிருக்கிறது என்று கருதுகிறீர்கள்?

## கட்டிக்காக்கும் தளபதி

நாம் போட்ட தார் சாலை. நாம் ஒரு நாள் 'நான்' என்று இறுமாப் போடு சொல்லிக்கொள்ள முடியும். எனக்கு வயது 57 முடிகிறது என்றால், ஏறத்தாழ என்னுடைய 13-வயதிலிருந்து தந்தை பெரியார் அவர்களுடைய மாணவனாக - அண்ணாவின் தம்பிகளில் ஒருவனாக - இந்த இயக்கத்தின் சாதாரணப் பேச்சாளனாக எழுத்தாளனாக இருந்து வளர்க்கின்ற பணியைத் தொடங்கி இதுவரை தொடர்ந்து நடத்தி வருபவன்.

அந்தக் காலத்திலேயே என்னைவிட இளையவரான வீரமணி தந்தை பெரியாருடைய கரம் பிடித்து வளர்ந்து - பேரறிஞர் அண்ணா வின் அன்பு மழையில் நனைந்து - உங்களுடைய நட்பால் இந்த இயக் கத்தினுடைய கொள்கைகளில் அதிக உறுதி படைத்தவராக ஆகி - இன்று அந்த இயக்கத்தையே கட்டிக்காக்கின்ற தளபதியாக - நம் முன் னால் இருக்கின்றார் என்றால் - நாங்கள் அதைப்பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

ஒரு இயக்கத்தைத் தொடங்கியவர்கள்தான் அதிலே இருக்க வேண்டும்; மற்றவர்கள் வரவே கூடாது என்றால், ஒரு வீட்டிலே மாமி யார்கள் மாத்திரம்தான் இருப்பார்கள்; பிறகு மருமகள்களே வர மாட்டார்கள்!

அந்த எண்ணத்திலே நான் சொல்லவில்லை.

ஆனால், இருக்கிற விவகாரம் - வந்த மருமகள் இருக்கிற மாமி யாரைத் துரத்தப் பார்க்கிறாளே - அது நியாயமா என்பதுதான்!

மாமியாரும் மருமகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மருமகளும் மாமியாரை மதிக்கவேண்டும்.

ஒரு இயக்கத்திலே இருந்து வளர்ந்தவர்கள், தாங்கள் வளர்ந்த நேரத்திலே - இயக்கத்தையும் சேர்த்து வளர்த்தவர்கள் தங்களுக்குரிய அறிவால் - ஆற்றலால் - தொண்டு செய்கின்ற இயல்பால் - ஒரு இயக் கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்து இருப்ப வர்கள். அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வரவேண்டும் என்று விரும்புகிறவர்கள் - அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவ ணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத் தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கிற பணியிலே ஈடுபடுவதும் வருகின்ற இளைய தலைமுறையும் - பழைய தலைமுறை பட்ட பாட்டி னால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்துக் காரியமாற்றவும், இந்த இயக் கம் நடைபோடவேண்டும் என்பதும்தான் என்னுடைய அவாவாகும்.

## இரட்டைக் குழல் துப்பாக்கி

திராவிடர் கழகத்திற்கும், தி.மு.கழகத்திற்கும் உள்ள ஒற்றுமையை தி.மு.கழகம் என்ற இந்த இயக்கம் தொடங்கப்பட்ட 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற தொடக்க விழாப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார். அதைத்தான் வீரமணி இங்கே குறிப்பிட்டார்.

திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி அப்படித்தான் நாங்கள் செயல்படுவோம் என்று அண்ணா அறிவித்த தற்கிணங்க, நாங்கள் அப்படித்தான் இன்றளவும் செயல்பட்டு வருகி றோம்.

இன்னொருவரும் சொல்லிக்கொண்டிருக்கிறார். 'என் அருகி லேயும் ஒரு திராவிடர் கழகம் இருக்கிறது. எனவே, நாங்களும் இரட் டைக் குழல் துப்பாக்கிதான்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இந்தத் துப்பாக்கி - சுடக்கூடிய உண்மையான துப்பாக்கி; இது போருக்குப் பயன்படக்கூடிய துப்பாக்கி! எதிரியை வீழ்த்தக்கூடிய துப்பாக்கி!

மற்றத் துப்பாக்கிகள் எல்லாம் தீபாவளிக்குக் குழந்தைகளிடத் திலே கொடுத்து 'கேப்' சுடுகிற துப்பாக்கிகள்!

அண்ணா குறிப்பிட்டது அந்தத் துப்பாக்கியை அல்ல.

இன்றைக்குத் தார்போட்ட சாலையிலே காரிலே போகிறவர்களே - போகிற வேகத்திலே எச்சிலைக்கூட எங்கள் மீது காறித் துப்பி விட்டுப் போகிறார்களே - அவர்களுக்கு அல்ல - எங்கள் மீது துப்பப் பட்ட எச்சிலை, துடைத்து விடுகிற தோழனே, உனக்குச் சொல்கிறேன்.

இந்தச் சாலையைப் போட்டவர்கள் நாங்கள்; இந்தச் சாலை அமைய கல் சுமந்தவர்கள் நாங்கள் - இந்தச் சாலை அமைய கொதிக்கும் வெயிலில் காலிலே சாக்கைக் கட்டிக்கொள்ளாமல், தகிக்கின்ற வெயிலில் தார் காய்ச்சியவர்கள் நாங்கள்.

தார் காய்ச்சுகின்ற நெருப்பின் சுவாலையில் - நெருப்பின் நாக்குகளுக்கு மத்தியில் அந்தச் சூட்டையும் கூடப் பொருட்படுத்தாமல் பணி யாற்றியவர்கள் நாங்கள்.

அப்படிப் பணியாற்றிய காரணத்தால், தார்போட்ட சாலை எங்களுக்குத்தான் சொந்தமென்று சொந்தம் கொண்டாடுகின்ற பேர் வழிகள் அல்ல நாங்கள்.

ஆனால், தார் போட்ட சாலையிலே, காரிலே போகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? எத்தகையவர்கள் அதிலே அமர்ந்து செல்லவேண்டும்? அவர்கள் சாலை போட்டவர்களையே, காறி உமிழ்கிறவர்களாக இருந்தால் இரண்டு பேருக்குத் தப்பலாம்; மூன்றாவது ஆளிடத்திலே துப்புகிற நேரத்தில் - கருணாநிதி பொறுத்துக்கொள்ளலாம் - வீரமணி பொறுத்துக்கொள்ளலாம்; மூன் றாவது ஆள் மேலே எச்சில் பட்டவுடனேயே ‘திருப்பித் தருகின்ற ஆளாக’ அவர் இருந்தால் அதற்குமேல் கார் செல்லாது.

எனவேதான், தார் போட்ட சாலையைப் போடுவதற்கு பெரியார் பட்ட கஷ்ட நஷ்டங்கள் - பேரறிஞர் அண்ணா பட்ட கஷ்ட நஷ்டங்கள் - பெரியாருடைய அருமைத் தளபதிகள் என்று சொல்லப்படுகின்ற பட்டுகோட்டை கே.வி.அழகிரிசாமி அண்ணன் போன்றவர்கள் - பொன்னம்பலனார் போன்றவர்கள் மாயவரம் நடராசன் போன்ற வர்கள் - நாகை மணி போன்றவர்கள் குடந்தை கே.கே.நீலமேகம் போன்றவர்கள் இவர்களெல்லாம் வழங்கி

இருக்கின்ற உழைப்பு - குத்தூசி குருசாமி போன்றவர்கள் எழுதிய எழுத்து - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போனறவர்கள் புதுச்சேரியிலே பட்டபாடு - இவர்களு டைய மொத்த விளைவுதான் சுயமரியாதை இயக்கத்தினுடைய வெற்றி.

தந்தை பெரியார் அவர்களுடைய சிலையினைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் - இதுபற்றிய எதிர் விமர்சனங்களும் செய்யப் படும் என்பதை நான் அறியாதவன் அல்ல.

இங்கே பேசிய நம்முடைய அருமை நண்பர்கள் சிலர் குறிப்பிட்ட தைப் போல - நம்முடைய இன எழுச்சியை எதிர்த்து தாழ்த்தப்பட்ட வர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் - தலைதூக்கி பீடுநடை போடு கிறார்களே என்று தாங்கவொண்ணாத கொதிப்பின் காரணமாக இதுவரை மவுனமாக இருந்தவர்கள் இன்றைக்கு ஊர்வலம் நடத்து கிறார்கள் என்றும் - அந்த ஊர்வலத்திலே "காணோமே, காணோமே, வீரமணியைக் காணோமே" என்று ஆரவாரக் கூச்சல்களைக் கேலி யாகப் போடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

**எங்கே காணமுடியும்?**

அவர்கள் நடத்துகின்ற ஊர்வலத்தில் நிச்சயமாக வீரமணியைக் காணமுடியாதுதான்! வீரத்தைக் காணமுடியாத இடத்தில் 'வீர மணி'யை அவர்கள் தேடி அலைகிறார்களே - என்பதற்காக நாம் நம் முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. வீரமணியைக் காணவேண்டுமென்றால், அவரை 'விடுதலை' அலுவலகத்தில் காணலாம்.

நாள்தோறும் இந்த நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி பொது மக்க ளைச் சந்தித்துப் பேசுகிறாரே - அந்த மேடைகளில் காணலாம்.

கருத்து மணக்க வெளிவருகிற 'விடுதலை' தலையங்கத்தில் வீர மணியைக் காணலாம்.

தந்தை பெரியாரின் சிலை எங்கெங்கே காணப்படுகிறதோ அங் கங்கெல்லாம் வீரமணியைக் காணலாம்.

வீரமணி, தந்தை பெரியாரின் மாணவர் - என்னுடைய இளவல் அண்ணாவின் அன்புத் தம்பி, நீங்கள் எல்லாம் மனமார ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த இயக்கத்தின் படைத் தளபதி!

அது மாத்திரமல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழன் வீரத்தை நிலைநாட்ட கடாரம் வரையிலே சென்றான்; கங்கை கொண்டான்; கனகவிசயருக்குத் தோல்வியைக் கொடுத்துவிட்டு, அவர்கள் தலையிலே கல்லேற்றி அவர்களை நடக்க வைத்து கண்ணகிக்குச் சிலையெடுத்தான் - என்றெல்லாம் நம்முடைய வரலாறுகளை இலக்கியங்கள் எடுத்து இயம்பிக் கொண்டிருக்கின்றன.

ஏன்? அதற்குப் பிறகும் கூட, ராஜராஜ சோழன். ராஜேந்திர சோழன் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிற பிற்காலச் சோழர்கள் காலத்தில் தமிழ் மன்னவர்கள் கடல் கடந்து படை நடத்தினர் - கப்பற்படை நடத்தினர் - வீரக்கொடியை, வெற்றிக் கொடியை - வெளி நாடுகளில் பறக்கவிட்டார்கள்.

## ‘வீரமணி’களும் கோழை மணி’களும்

தமிழனுடைய நாவாய்கள் - மரக்கலங்கள் - கப்பல்கள் தமிழகத்தினுடைய விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு கிரேக்கம், யவனம் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்றன. இவ்வாறு வீரத்திலும், விவேகத்திலும் சிறந்து விளங்கிய இந்தத் தமிழகம் இடையிலே ஏற்பட்ட தொய்வின் காரணமாக ‘வீரமணி’களை இழந்து ‘கோழை மணி’களைக் குவியல் குவியலாகப் பெற்றது. அதைப் பார்த்துத்தான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் ‘காணோமே; காணோமே; வீரமணியைக் காணோமே’ என்று அன்று குரல் எழுப்பினார்கள்.

அவர்களுக்குக் கிடைத்த ‘வீரமணி’தான் இங்கே அமர்ந்திருக்கின்ற நம்முடைய திராவிடர் இயக்கத்தின் பொதுச்செயலாளர் வீரமணி அவர்கள்!

எனவே, ஒரு காலத்தில் ‘வீரமணி’கள் குவிந்துகிடந்த தமிழகம் பிறகு ‘கோழை மணி’களால் சிதைந்து - இன்று அந்த நிலைமை மாறி நமக்கு ‘வீரமணி’கள் நிரம்பக் கிடைத்திருக்கிறார்கள்.

பெரியாருக்கும், சங்கராச்சாரியாருக்கும் அல்லது எந்த மதக் குருக்களுக்கும் நேரடி மோதல்கள் கிடையாது.

காஞ்சிபுரத்தில் பிறந்த - வளர்ந்த - உலவிய அண்ணா அவர்கள், அந்த காஞ்சிபுரத்திலே இருக்கிற காஞ்சி சங்கராச்சாரியாரின் மடத்திற்கு ஒரு நாள் கூட சென்றது கிடையாது. அந்த மடத்தின் படிக் கட்டுகளில் அண்ணாவின் பாதங்கள் பட்டது கிடையாது.

ஏன்? என்ன காரணம்? சங்கராச்சாரியாரை அண்ணாவிற்கு தனிப்பட்ட முறையில் பகை காரணமாகப் பிடிக்காதா? அல்ல, அல்ல. அவர் ஏற்றுக்கொண்ட கொள்கை அதற்கு இடம் தரவில்லை. ஆகவே அண்ணா அங்கே செல்லவில்லை. அதனால் சங்கராச்சாரியாரை தரக் குறைவாகப் பேசினோம் மட்டமாகப் பேசினோம் தகுதியற்ற முறையில் பேசினோம் என்று கயிறு திரித்து அதன் காரணமாக லாப மடையலாம் என்று யாராவது கருதினால், அந்த வஞ்சகர்களை - அந்த சூழ்ச்சிக்காரர்களை - அந்த சூதர்களை - நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். யார் யாரோ இன்றைக்கு அறைகூவல் விடுகிறார்கள். போர் முழக்கம் செய்கிறார்கள்.

## எட்டப்பர்கள்

ஆனால் அவர்களுடைய போர் முழக்கத்திற்கு அடிப்படை தைரியம் என்ன? வீரமணி கூட சொன்னார் - அதிலிருந்து நான் மாறுபடுகிறேன்.

'அந்தக் காலத்திலே வேண்டுமானால் வாலியையும், சுக்ரீவனையும் மோதவிட்டு மறைந்திருந்து இராமன் வெற்றி பெறலாம்' என்று வீரமணி சொன்னார்.

'இந்தக் காலம் அப்படியல்ல; வாலியும், சுக்ரீவனும் எப்படி எப்படி என்று புரிந்துவிட்டது. நேரடியாகவே இராமன் வந்துவிட்டான்' என்றும் சொன்னார். அந்தக் கருத்திலிருந்து நான் மாறுபடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். இன்றைக்கும் விபீடணர்கள் தமிழகத்திலிருக்கிறார்கள். இன்றைக்கும் காட்டிக்கொடுக்கிற துரோகிகள்-எட்டப்பர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள்.

இன்றைக்கும் கருவுற்று - பத்து மாதம் வாழ்ந்து வளர்ந்து - பால் குடித்த தாயின் மார்பை அறுத்தெறியக் கூடிய கயவர்கள் கூட்டம் தமிழகத்தில் இருக்கிறது.

எனவேதான் அந்தக் கயவர்கள் கூட்டத்தை வேரறுக்க - அந்த விபீஷணக் கூட்டத்தை வேரறுக்க - அந்தச் சுக்ரீவன்களின் கூட்டத்தைச் சுக்கு நூறாக்க - தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை - தன்மான உணர்வு - தமிழினப் பற்று இவைகளை யெல்லாம் கேடயங்களாக - வாள்களாக நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதைப் பயன்படுத்துவோம் என்று பலரறிய நாடறிய - உலகறிய சூளுரைக்கின்ற நாள்தான் பெரியாரின் சிலை திறக்கின்ற நாள் என்று கூறி முடிக்கின்றேன்.

***(ஆத்தூரில் 1.11.81 அன்று தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்து கலைஞர் ஆற்றிய பேருரை)***

ANNA CENTENARY LIBRARY
04 OCT 2024
CHENNAI - 85
G022895
தமிழ் நூல் காப்பகம்
52262
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

## நாணயத்தின் பக்கங்கள்

"திராவிடர் கழகம் - தி.மு.கழகம் இவைகளை நான் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று கூடச் சொல்லமாட்டேன். அது தவறு என்று நான் கருதுவதால் அல்ல. எப்படி ஒரு ரூபாய் நாணயத்திற்கு இரண்டு பக்கம் தேவையோ அப்படித் தான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ரூபாய் நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று நான் ஆத்தூரிலே பெரியார் சிலைத் திறப்பு விழாவிலே பிரகடனப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். திராவிடர் கழகத்தினுடைய உணர்வு இல்லாமல் தி.மு. கழகம் இல்லை. தி.மு.கழகத்தின் உணர்வில்லாமல் திராவிடர் கழகம் இல்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை".

- இந்நூல் பக்கம் 5